# IN THE COURT OF THE DISTRICT MUNSIF,
## Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons), District Munsif, Arni.
## O.S.70/2020

2025–ம் ஆண்டு ஜூலை மாதம் 21ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3–ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.1 குப்புசாமி, வயது 68, த/பெ P.சோமசுந்தரம்**

**குறுக்கு விசாரணை**

நான் களம்பூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். பிரதிவாதி எனது உறவுக்காரரா என்றால் தூரத்து உறவுக்காரர். என் சித்தப்பா வழி அண்ணன் தம்பி உறவு முறை ஆவார். தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் என் சித்தப்பா எ.முத்துசாமி என்பவருக்கு பாத்தியப்பட்டது. முத்துசாமியின் மனைவி லட்சுமியம்மாள் ஆவார். அவர்களுக்கு வாரிசுதாரர்கள் உள்ளார்களா என்றால் இல்லை.

2. அவர்கள் உயிருடன் உள்ளார்களா என்றால் இல்லை. என் சித்தப்பா 2016ல் இறந்து விட்டார். என் சித்தி 2020ல் இறந்து விட்டார். மேற்படி சொத்து சித்தப்பா சித்திக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் என் சித்தப்பா சித்தி உயிருடன் இருந்த காலத்தில் அனுபவித்து வந்தார்கள். அவர்கள் உயிருடன் இருக்கும் போது ஆவணங்கள் ஏதாவது ஏற்படுத்தினார்களா என்றால் 2009ம் வருடம் உயில் எழுதி வைத்தார்கள்.

3. மேற்படி உயில் பதிவு செய்யப்பட்டதா என்றால் பதிவு செய்யப்பட்டது. மேற்படி உயிலை எழுதிய பிறகு எத்தனை வருடங்கள் உயிருடன் இருந்தார்கள், அவர்களுக்கு எத்தனை வயது என்றாலும் அவர்களுக்கு 60 வயதை தாண்டியது. அவர்களுக்கு உடல்நிலை நலமாக இருந்ததா என்றால் இருந்தது. அவர்களுக்கு ஜீவனம் யார் செய்தது என்றால் நான்தான் செய்தேன்.

4. உயில் கடைசி காலத்தில் நான் அவர்களை வைத்து நல்ல முறையில் பார்த்துக் கொள்வேன் என்ற உத்தரவாதத்தின் அடிப்படையில் எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி என் சித்தப்பா சித்தி தாவா இடத்தில் தனியாக வசித்து வந்தார்கள் என்றாலும், நான் வாரா வாரம் அவர்களை சென்று பார்ப்பேன் என்றால் சரிதான். உயில் எழுதி வாங்கிய பின்னர் அவர்களுக்கு தேவையான மருத்துவ செலவுகளை நான்தான் செய்தேன் என்றால் செய்தேன். அவர்களுக்கு சர்க்கரை வியாதிக்கான மாத்திரைகள் மற்றும் இதய நோய்க்கான மாத்திரைகள் மற்றும் கண் அறுவை சிகிச்சைக்கான மாத்திரைகள் அனைத்தும் நான்தான் வாங்கி கொடுத்தேன்.

5. என் சித்திக்கு சர்க்கரை நோய் காரணமாக முதலில் தொடையில் கட்டி இருந்ததால் அதற்கான அறுவை சிகிச்சை செய்தேன். பின்னர் காலில் கொப்பளம் இருந்ததை அறுவை சிகிச்சை செய்து அகற்றினேன். மேற்படி சம்பவம் 2009 உயிலுக்கு முன்னாடியா, பின்னாடியா என்றால் ஒரு அறுவை சிகிச்சை முன்னாடியும், மற்றொன்று பின்னரும் நடந்தது. அவர்களுக்கு மருத்துவ செலவிற்காக நான் எவ்வளவு செலவு செய்தேன் என்றால் ரூபாய் 8 லட்சம் வரை செலவு செய்தேன்.

6. நான் எந்த வயதில் சித்தப்பா, சித்தியை பராமரித்து மற்றும் காப்பாற்றி வந்தேன் என்றால் எனக்கு 25 வயது இருக்கும் போதிருந்தே காப்பாற்றி வந்தேன். மேற்படி விவரங்களை நான் தாவாவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் செலவு செய்தததற்காக ஏதேனும் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி ஆவணங்கள் தொலைந்து விட்டதால் நான் அதை தாக்கல் செய்யவில்லை.

7. நான் அவர்களுக்கு எதுவும் செலவு செய்யாமல், அவர்களை ஏமாற்றி உயில் எழுதி கொண்டு அவர்களை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டேன் என்றால் சரியல்ல. அவர்களேதான் மனம் உவந்து உயில் என் பெயருக்கு எழுதி வைத்தார்கள். மேற்படி என் சித்தப்பா சித்திக்கு யார் கொள்ளி வைத்தது என்றால் என் சித்தப்பாவிற்கு நானும், சித்திக்கு யாரும் கொள்ளிப் போடவில்லை. ஊரில் பிரச்சினை ஏற்பட்டதால் நாங்கள் யாரும் எங்கள் சித்திக்கு கொள்ளிப் போடவில்லை.

8. உயில் பரிகாரம் பட்டா ஏதேனும் மாற்றி உள்ளேனா என்றால் இல்லை. நான் 2009ம் வருடம் வாங்கிய உயிலை 13.02.2019 அன்று நான் சரியாக பராமரித்து பார்த்துக் கொள்ளாத காரணத்தால் மேற்படி உயிலை ரத்து செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்த பின்னர்தான் மேற்படி விவரம் தெரிய வந்தது. 13.02.2019 அன்று உயிலை ரத்து செய்து அதே தேதியில் மீண்டும் 2 உயிலை எழுதி வைத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்த பின்னர்தான் மேற்படி விவரம் தெரிய வந்தது.

9. மேற்படி 2 உயிலையும் நான் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி உயில் யார் ரத்து செய்தது மற்றும் யார் எழுதி வைத்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் என் சித்தி ரத்து செய்து மீண்டும் 2 உயில்களை யாருக்கு எழுதி வைத்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் நீதிமன்றத்திற்கு வந்த பிறகுதான் மேற்படி 2 உயில்களை எழுதி வைத்த விவரம் தெரியும். ஆனால் யாருக்கு எழுதி வைத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

10. நான் மேற்படி விவரங்களை அறிந்து மேல்நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. தாவா சொத்தில் உள்ள நீளம் அகலம் என்ன என்றால் 22 x 125 ஆகும். அது ஓட்டு வீடு ஆகும். முதலில் ஓட்டு வீடும், பின் பக்கம் காலி இடமாக இருந்தது. மேற்படி வீட்டில்தான் பிரதிவாதி வசித்து வருகிறார் என்றால் இல்லை. நான்தான் வசித்து வருகிறேன். அதற்கான வீட்டு வரி ரசீது யார் பெயரில் உள்ளது என்றால் என் சித்தப்பா பெயரில்தான் உள்ளது.

11. நான்தான் மேற்படி வீட்டில் வசித்து வருவதற்கான ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. என் சித்தப்பா பெயரில்தான் உள்ளது என்பதற்கு என்னென்ன ஆவணம் நான் வைத்துள்ளேன் என்றால் வீட்டு வரி ரசீது ஒன்றும், மின்சார ரசீது ஒன்றும் தாக்கல் செய்துள்ளேன். மற்ற ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் ஏதும் இல்லை. 21.02.2019 அன்று நான் என் சித்தியை வீட்டை பூட்டி வெளியேற்றியதற்காக என் சித்தி என் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரிதான்.

12. மேற்படி சம்பவத்தில் போலிசார் வந்து பூட்டை திறந்து விட்டார்கள் என்றால் வேறு ஆட்கள் என்பது பிரதிவாதி நான் ஊருக்கு சென்ற பின்பு வீட்டிற்கு வருவதால் நான் வீட்டை பூட்டி விட்டேன். நானும் என் சித்தியும் பேச்சு வார்த்தையில் தான் இருந்தோம். பிரதிவாதி என் வீட்டிற்கு வந்து போவதால் நான் என் சித்தியிடம் அவர் வரக்கூடாது என்று ஆட்சேபணை செய்தேன். மேற்படி உயிலை என் சித்தி ஏன் ரத்து செய்தார்கள் என்பதை நான் என் சித்தியிடம் கேட்டேனா என்றால் எனக்கு மேற்படி விவரம் என் சித்தி உயிருடன் இருக்கும் வரை தெரியாது.

13. உயில் ரத்து செய்த விவரம் தெரிய வந்ததால் என் சித்தியை அடித்து கொடுமைப்படுத்தினேன் என்றால் நான் என் சித்தியை அடிக்கவில்லை. 2019ல் நடந்த சம்பவத்திற்குதான் நான் 2020ம் வருடம் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 2 உயில்களிலும் தென்னன்டை பாதி பிரதிவாதிக்கும், வடவான்டை பாதி எனக்கும் பிரித்து உயில் எழுதி வைத்தார்கள் என்றால் சரிதான். அதை நான் அறிந்து முழு சொத்தும் எனக்கு வேண்டி இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன்.

14. சொத்தில் எனக்கு பாதி உரிமை உள்ளது என்றாலும், நான் முழு சொத்திற்கு உரிமை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். நான் என்னுடைய வழக்கில் தடை உத்தரவு கோரிதான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், உரிமை கோரி தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து என்னுடையதுதான். ஆதலால் நான் உரிமை பரிகாரம் கோரவில்லை.

15. நான் உரிமை பரிகாரம் இல்லாமல் தடை உத்தரவு கோரிய பரிகாரம் சட்டப்படி செல்லுபடி ஆகாது என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கவில்லை. நான்தான் மேற்படி தாவா சொத்தை அனுபவித்து வருகிறேன் என்பதற்கான ஆவணம் உயிலை தவிர்த்து வேறு ஏதும் இல்லை என்றாலும், மேற்படி உயிலும் ரத்து செய்யப்பட்டது என்றாலும் ஆதலால் என்னால் தடையுத்தரவு பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. தாவாவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
District Munsif Court,
Arani.